## 11.10 இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு பற்றிய பரிந்துரைகளின் மீதான அரசின் ஆணைகள்

நிதித் (நிதிக்குழு/IV) துறை

அரசாணை (நிலை) எண் 284 நாள் : 12.8.2002

படிக்க :

1) அரசாணை (நிலை) எண் 518 நிதித் (வருவாய ஆதாரங்கள்) துறை, நாள்:.1.12.1999.
2) அரசாணை (நிலை) எண் 103 நிதித் (வருவாய் ஆதாரங்கள்) துறை, நாள்: .3.3.2000.

**ஆ ணை**

அரசியலமைப்புச் சட்டத்தின் 73 மற்றும் 74 ஆம் திருத்தங்களுக்கேற்ப ஊரக ‘மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமைகளை ஆய்வு செய்து. உரிய பரிந்துரைகள் செய்ய, மேலே பார்வை–1 இல் படிக்கப்பட்ட அரசாணையில் இரண்டாவது மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டது. மேலே பார்வை –2 இல் படிக்கப்பட்ட அரசாணையில் இரண்டாவது மாநில நிதி ஆணையத்திற்கான ஆய்வு வரம்புகள் வெளியிடப்பட்டன. அதன்படி இவ்வாணையம் அதன் அறிக்கையை 31.10.2001–க்குள் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இரண்டாவது மாநில நிதி ஆணையம் அதன் அறிக்கையை 21.5.2001 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்களிடம் அளித்தது.

2. மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு செய்தல், ஊரக, நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே நிதிப்பகிர்வு செய்தல், ஊரக, நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பல்வேறு அடுக்கு நிலை அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல் ஆகியவை தொட்பான இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை அரசு ஆய்வு செய்தது. முக்கிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள் கடந்த 27.3.2002 அன்று சட்டமன்றத்தில் வரவு – செலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்டன. மேலும் ஆணைத்தின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் விளக்கக் குறிப்பு ஆணையத்தின் அறிக்கையுடன் 8.5.2002 அன்று சட்டமன்றத்தில் வைக்கப்பட்டது.

3. இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் அறிக்கையில் நிதிப்பகிர்வு முறை என்ற அத்தியாயத்திலுள்ள பரிந்துரைகளை அரசு கவனமாகப் பரிசீலித்து பின்வருமாறு ஆணையிடுகிறது:

(i) (அ) கேளிக்கை வரி வருவாயில் 90 சதவீதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுவது தொடரப்படும்.

(ஆ) கேளிக்கை வரி கழிக்கவும் – திருப்பிச் செலுத்துதல் (Deduct - Refunds) பதிவுகளாக மாற்றி வழங்கப்படும்.

(ii) (அ) முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரியில் தற்போதுள்ள தொகுப்பு ஏற்பாடு தொடரப்படும். ஊராட்சிகளைப் பொறுத்த வரையில் மக்கட் தொகைக்கு 50 சதவீதமும் முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி வசூலுக்கு 50 சதவீதமும் நிறை முக்கியத்துவம் ( Weightage) அளித்து முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி பகிர்ந்தளிக்கப்படும்.

(ஆ) முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி வசூலில் அரசுக்கு ஆகும் வசூல் செலவு நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு 5 சதவீதமாகவும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 3 சதவீதமாகவும் வரையறுக்கப்பட்டு அரசால் இருத்திக் கொள்ளப்படும்.

(iii) ஒவ்வொரு காலாண்டுக்கான கேளிக்கைவரியையும், முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரியையும் அடுத்து வரும் காலாண்டின் இரண்டாவது மாதத்தில் வழங்கவும், உள்ளூர் செஸ் / உள்ளூர் செஸ் மேல் வரி ஆகியவற்றில் 50 சதவீதம், ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்திலும், எஞ்சியுள்ள 50 சதவீதம், மே மாதத்திலும் சரிக்கட்டல் செய்யவும் கோரும் ஆணையத்தின் பரிந்துரை அரசின் நிதிநிலையை பொறுத்து பரிசீலிக்கப்படும்.

(iv) (அ) மாநில அரசு நிலவரியைத் தள்ளுபடி செய்யும் போது அல்லது குறைக்கும் போதெல்லாம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் உள்ளூர் செஸ் மற்றும் உள்ளூர் செஸ் மேல் வரி இழப்பு ஈடுசெய்யப்படவேண்டும் என்ற இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரை நிலவரியிலிருந்து, உள்ளூர் செஸ் மற்றும் உள்ளூர் செஸ் மேல் வரி ஆகியவற்றைப் பிரிப்பது பற்றி ஆய்வு செய்யும் போது முடிவுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(ஆ) 1997–2002 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளூர் செஸ்/ உள்ளூர் செஸ் மேல் வரி நிலுவைத்தொகை, அரசாணை எண் 834/ ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத்துறை, நாள் 7/6/1982 இன் அடிப்படையில் சரிக்கட்டப்படும்.

(இ) உள்ளூர் செஸ் மேல் வரி வீதத்தை ரூ.5ல் இருந்து ரூ.7 ஆகவும் உள்ளூர் செஸ் வீதத்தை ரூ1.ல் இருந்து ரூ.2 ஆகவும் நில வரியின் முழுத்தொகையில் (on the rounded land revenue) அதிகரித்து விதிக்கப்படும். இவ்வுயர்வால் கிடைக் கும் கூடுதல் வருவாயில் பாதி ஊராட்சிகளுக்கும். ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒப்படைப்பு செய்யப்பட்ட வருவாயாகவும் Assigned Revenue) மற்றும் எஞ்சிய 50 சதவீதம் நீர்ப்பயன்பாட்டு சங்கங்களுக்கும் ( Water Users Associations) அளிக்கப்படும். நீர்ப்பயன்பாட்டு சங்கங்கள் அமைக்கப்படாத பகுதிகளில் அந்தத் தொகை ஊராட்சி / ஊராட்சி ஒன்றியங்களில் பொறுப்பில் உள்ள குளங்களை பராமரிப்பதற்கு செலவிடப்படும்.

(ஈ) உள்ளூர் செஸ் / உள்ளூர் செஸ் மேல் வரி வசூலை மேம்படுத்துவதற்காக கிராம நிர்வாக அலுவலர்களுக்கு 2.5 சதவீத ஊக்கத் தொகை வழங்க வேண்டும் என்ற பரிந்துரையை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. உள்ளூர் செஸ் / உள்ளூர் செஸ் மேல் வரி வசூலில் 2.5 சதவீதத்தை வசூல் கட்டணமாக அரசு இருத்திக் கொள்ளும்.

(v) 2002–03 லிருந்து 2006–07 ஆம் ஆண்டு வரையில் ஒவ்வொரு ஆண்டிற்கும் கேளிக்கை வரி நீங்கலாக மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் இருந்து 8 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

(vi) மாநிலத்திற்கான மத்திய அரசின் நிதிப் பகிர்விலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு 5 சதவீதம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்ற ஆணையத்தின் பரிந்துரை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 243 I மற்றும் 243y ஆகிய பிரிவுகளின் ஆய்வு வரம்பிற்கு அப்பாற்பட்டுள்ளதால் இப்பரிந்துரையை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

(vii) உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசின் மொத்த நிதி மாற்றத்தில் 80 சதவீதம் கோட்பாடு அடிப்படையிலான (Formula - based) (தொகுப்பு ‘அ’ மற்றும் தொகுப்பு ‘ஆ’) நிதி மாற்றங்கள் மூலமாகவும் எஞ்சிய – 20 சதவீதம் ஆணையத்தின் நிதிப் பகிர்வு வரம்புக்கு அப்பால், திட்டம் சார்ந்த, திட்டத்தில் சேராத மற்றும் ஏனைய விருப்ப அடிப்படையிலான நிதி மாற்றங்கள் மூலமாகவும் இருக்க வேண்டும் என்ற ஆணையம் பரிந்துரைத்த உச்சவரம்பிற்கு உட்படாமல் தற்போதுள்ள நடைமுறையே தொடரப்படும்.

(viii) மேலே பத்தி (v)–ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்கிடப்படும் நிதிப்பகிர்வில் 87 சதவீதம், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்குமிடையே 58–42 என்ற விகிதாச்சாரத்தில் (Vertical Sharing Ratio) பகிர்ந்தளிக்கப்படும்.

(ix) உள்ளாட்சி அமைப்புகளின் மறுவகைப்பாடு மற்றும் நகர்மயமாக்கல் போன்ற காரணக்கூறுகளை கணக்கில் எடுத்துக்கொண்டு, ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளிடையேயான நிதிப்பகிர்வு விகிதாச்சாரத்தை 59:41 என மாற்றவேண்டும் எனற ஆணையத்தின் பரிந்துரை உள்ளாட்சி அமைப்புகளின் மறுவகைப்பாட்டின் மீது அரசு ஆணை பிறப்பிக்கும் போது ஆய்வு செய்யப்படும்.

(x) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிப்கிர்வுத் தொகை கிராம ஊராட்சிகளுக்கும். ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கும் முறையே 47:45:8 என்ற விகிதாச்சாரத்திலேயே தொடர்ந்து பகிர்ந்தளிக்கப்படும்.

(xi) (அ) நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிப்பகிர்வுத்தொகை மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றிற் கிடையே முறையே 31.34.35 என்ற புதிய விகிதாச்சாரத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

(ஆ) சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்படும் மாநில நிதி ஆணையத்தின் நிதிப்பகிர்வில் 10 சதவீதம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு பகிர்ந்தளிக்கப்படும்.

(xii) நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் மறுவகைப்பாட்டை, கணக்கில் எடுத்துக் கொண்டு, மாநகராட்சிகள் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கிடையேயான நிதிப்கிர்வு விகிதாச்சாரத்தை முறையே 34:31.:35 என மாற்றவேண்டும் என்ற ஆணையத்தின் பரிந்துரை உள்ளாட்சி அமைப்புகளின் மறுவகைப்பாட்டின் மீது அரசு ஆணை பிறப்பிக்கும் போது ஆய்வு செய்யப்படும்.

(xiii) (அ) ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே கிடை நிலை பிரித்தளித்தலுக்கு (Horizontal Distribution) கீழே குறிப்பிட்டுள்ளபடி நிறை முக்கியத்துவங்கள் (Weightages) அளிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| மொத்த மக்கட் தொகை | – | 40% |
| பெண்கள் மக்கட் தொகை | – | 40% |

குடிசைகளில் வாழ்வோர் மற்றும்
ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மக்கட் தொகை – 20%

(ஆ) குடிசைவாழ் மக்கட் தொகை உட்பட 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படியான மக்கட் தொகை, நிதிப்பகிர்வுக்கான மக்கட் தொகை அளவீட்டிற்குப் பின்பற்றப்படும்.

(xiv) கடன் மற்றும் கடன் அல்லாத பொறுப்புகளை மாநில நிதி ஆணைய நிதிப்பகிர்வில் இருந்து சரிக்கட்டலுக்கான உச்சவரம்பு பற்றிய ஆணையத்தின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை,

(xv) மேலே பத்தி (v) –ல் குறிப்பிடப்பட்டுள்ள சதவீதத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு வரும் நிதிப்பகிர்வுத் தொகையில், 87 சதவீதத்தை நிதிப்பகிர்வுக் கோட்பாடுகளின் அடிப்படையில் பகிர்ந்தளிக்க ஒதுக்கிய பின், எஞ்சிய 13 சதவீதத்தை சேமநிதி, சமன்பாட்டு நிதி மற்றும் ஊக்க நிதியை உருவாக்குவதற்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு அரசு ஒதுக்கும்.

(அ) சேமநிதிக்கு 2 சதவீதம், சமன்பாட்டு நிதிக்கு 6 சதவீதம் மற்றும் ஊக்க நிதிக்கு 5 சதவீதம் என ஒதுக்கப்படும்.

(ஆ) சேமநிதிக்கு ஒதுக்கப்படும் தொகை, மாவட்ட ஆட்சியர் மேம்பாட்டு நிதிக்கும் மழைநீர் சேகரிப்புத் திட்டங்களுக்கும் சமமாக அளிக்கப்படும்.

(இ) ஊக்க நிதியையும் சமன்பாடு நிதியையும் பயன்படுத்துவது பற்றிய கொள்கைகள் (Principles) பற்றி பின்னர் முடிவு செய்யப்படும்.

(ஈ) சமன்பாட்டு நிதியின் ஒரு அங்கமான நகர்ப்பகுதி மேம்பாட்டு நிதி, நகர்ப்பகுதி மேம்பாட்டு மானிய நிதி என பெயர் மாற்றம் செய்யப்படும்.

(உ) நகர்ப்பகுதி மேம்பாட்டு மானிய நிதியை பயன்படுத்துவது பற்றிய கொள்கைகள் பின்னர் முடிவு செய்யப்படும்.

(ஊ) மாவட்ட ஆட்சியர் மேம்பாட்டு நிதியை பயன்படுத்துவது பற்றிய வழிகாட்டிக் குறிப்புகள் அரசு அளவில் ஊரக வளர்ச்சி / நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறைகளால் வெளியிடப்படும்.

(எ) நிதிப்பகிர்வுக்காகப் பின்பற்றப்படும் 58:42 என்ற விகிதாச்சாரம் சேமநிதி, சமன்பாட்டு நிதி மற்றும் ஊக்க நிதியை பிரித்தளிப்பதற்கும் கடைப்பிடிக்கப்படும்.

(xvi) பதினோராவது மத்திய நிதி ஆணையத்தின் இயற்கைச்சீற்றம் குறித்த நிவாரண நிதியில் 30 சதவீதத்தை உள்ளாட்சி அமைப்புகளின் பேரழிவு நிவாரண நிருவாகத்திற்காக தனியாக ஒதுக்கீடு செய்யத் தேவையில்லை.

(xvii) ஒவ்வொரு ஆண்டும் சேமநிதியின் ஒரு அங்கமான மாவட்ட ஆட்சியர் மேம்பாடு நிதியிலிருந்து செலவிடப்படாத தொகைகள் இருப்பின் அவை, நான்காவது காலாண்டில் பொதுப்பகிர்வுக்கு கொண்டு செல்லப்பட்டு மக்கட் தொகையின் அடிப்படையில் பகிர்வு செய்யப்படும்.

(xviii) மாநில நிதி ஆணையத்தின் நிதிப்பகிர்வில், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் மூலதனப் பணிகளுக்கு முறையே 10 சதவீதமும், பேரூராட்சிகள் 15 சதவீதமும், கிராம ஊராட்சிகள் 20 சதவீதமும் ஒதுக்க வேண்டும்.

(xix) நிதிப்பகிர்வு முறையில் வகை செய்யப்பட்டுள்ள நிதிகள், உள்ளாட்சி மன்றங்களின் குறிப்பிட்ட பணி நோக்கங்களுக்காக வகுக்கப்பட்டுள்ளதால் ஒரு நிதியிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றப்படமாட்டாது. பயன்படுத்தப்படாத நிதி ஏதேனும் இருப்பின் அவை கோட்பாடு அடிப்படையிலான நிதிப்பகிர்வுக்காக பொதுவான பகிர்வு நிதியில் சேர்க்கப்படும். இது, நிதித்துறையில் ஒவ்வோர் நிதி ஆண்டின் கடைசிக் காலாண்டில் முடிவு செய்யப்படும்.

(xx) உள்ளாட்சி மன்றங்களுக்கு காலாண்டுக்கு ஒரு முறை நிதிப் பகிர்வுத் தொகைகளை வழங்குவதில் அரசுக்கு உள்ள நிதி இடர்ப்பாட்டை கருத்திற் கொண்டு, ஒவ்வொரு காலாண்டின் முதல் மாதத்தில் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கும், அடுத்த மாதத்தில் கிராம ஊராட்சிகள்மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கும் கடைசி மாதத்தில் பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரே சீராக நிதியை வழங்கலாம் என ஆணையம் பரிந்துரைத்திருந்தது ஆணையத்தின் பரிந்துரை அரசின் நிதி இடர்பாடுகளை கருத்திற்கொண்டு பரிசீலிக்கப்படும்.

(xxi) அடுத்த வரும் ஆண்டுக்குரிய நிதிப்பங்கீடுகளை உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கும் போது, அந்தந்த ஆண்டில் இயல்பான வருவாய் ஏற்றம் அல்லது வருவாய் குறைவு காரணமாக மேற்கொள்ள வேண்டிய சரிக்கட்டல்கள் பற்றி, முதல் காலாண்டில் வெளியிடப்படும் அரசாணையிலேயே தெளிவாக விளக்கப்படும்.

(xxii) கிரானைட் குத்தகை வருவாய்களை உள்ளாட்சி அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்வது பற்றிய இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் ஏற்கப்படவில்லை.

4) மேலே பத்தி–3 இல் வெளியிடப்பட்டுள்ள அரசின் ஆணைகள் 1.4.2002 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்படும். மேற்கண்ட ஆணைகள் மீதான தொடர் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட துறைகள் எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ந.நாராயணன்**
அரசு செயலளர்